## பெரியார் கனவை நனவாக்க –

# பெண்களுக்கு முன்னுரிமை கொடுத்து, திட்டங்களை நிறைவேற்றுகிறது ‘திராவிட மாடல்’ அரசு!

## நாகை மனோகரன் இல்லத் திருமண விழாவில் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

நாகை,நவ.25-


**நாகப்பட்டினத்தில், கழக மீனவர் அணி துணைச் செயலாளர் அக்கரைப்பேட்டை மனோகரன் , அழியாநிதி ஆகியோரின் மகன் மருத்துவர் குறளரசன், மருத்துவர் பிருந்தாஞ்சலி இணையரின் திருமணத்தை, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று நடத்தி வைத்தார்.**

**அப்போது இல்லற வாழ்வில் இணைய உள்ள இணையர் இருவரும் கலைஞரும் கழகமும் போல், கழகத் தலைவரும் உழைப்பும் போல பல்லாண்டு வாழ்கவென வாழ்த்தி சிறப்புரையாற்றினார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய சிறப்புரை வருமாறு:**

நம் கழகத்தின் மாநில மீனவர் அணித் துணைச் செயலாளர் அண்ணன் அக்கரைப் பேட்டை மனோகரன், அக்கரைப்பேட்டை ஊராட்சி மன்றத் தலைவர் அக்கா அழியாநிதி மனோகரன் தம்பதியினரின் மகன் மருத்துவர் குறளரசனுக்கும், காரைக்கால் மேடு சந்திரன் என்கிற பரமசாமிசத்யா தம்பதியினரின் அன்பு மகள் மருத்துவர் பிருந்தாஞ்சலிக்கும் இங்கு திருமணத்தை நடத்தி வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். உங்களுடன் சேர்ந்து அவர்களையும் வாழ்த்துகிறேன்.





தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.11.2024) நாகப்பட்டினத்தில், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் அக்கரைப்பேட்டை கோ.மனோகரன் அவர்களின் மகன் மருத்துவர் ம.குறளரசன் – மருத்துவர் பெ.பிருந்தாஞ்சலி ஆகியோரது திருமணத்தை நடத்தி வைத்து, இணையரை வாழ்த்தினார். இத்திருமண விழாவில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா.முத்தரசன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், நாடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ், தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழக தலைவர் என்.கௌதமன், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத் தலைவர் உ.மதிவாணன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜெ.முகம்மது ஷா நவாஸ், வி.பி.நாகை மாலி, மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் திருமதி.ச.உமா மகேஸ்வரி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### மிகப்பெரிய மாநாடு

அண்ணன் மனோகரன் அவர்கள் மிகவும் கொடுத்து வைத்தவர். ஏனென்றால், அவரின் மனைவியின் பெயரே அழியாநிதி. அழியாத நிதிக்குச் சொந்தக்காரர். அதனால்தான் அண்ணனுக்கு நிதிப்பற்றாக்குறையோ, நிதிப் பிரச்சனையோ என்றைக்குமே இருந்தது இல்லை. அதனால்தான், இந்த திருமணத்தைக்கூட ஒரு மிகப்பெரிய மாநாடு போல சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கிறார்.

அதேபோல் நேற்று இரவு 11 மணிக்குத்தான் திருச்சியில் பல்வேறு நிகழ்ச்சிகளை முடித்துவிட்டு, துறையூரிலிருந்து நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு வந்தேன். வருகின்ற வழி எல்லாம் சிறப்பான வரவேற்பு கொடுத்ததற்கு அண்ணன் கௌதமன் அவர்களுக்கு இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### மறக்க முடியாத நிகழ்வு

எவ்வளவோ மாவட்டத்திற்குச் சென்றாலும், எவ்வளவோ ஊர்களுக்குச் சென்றாலும் சொந்த மண்ணுக்கு வரும்பொழுது ஒரு இனம்புரியாத மகிழ்ச்சி உண்டாகும். அந்த மகிழ்ச்சியான உணர்வோடுதான் நம் மாவட்டத்திற்கு இங்கு வருகை தந்து இருக்கிறேன். இந்த நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு எத்தனையோ முறை வந்து இருக்கிறேன். கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளராக, சட்டமன்ற உறுப்பினராக பிரச்சாரங்களுக்கு வந்திருக்கிறேன். கழக நிகழ்ச்சிகளுக்கு வந்திருக்கிறேன். ஆனால், இந்த முறை வந்தது என்னால் மறக்க முடியாத ஒரு நிகழ்வு ஏனென்றால், முதன் முறையாக துணை முதலமைச்சர் என்ற பொறுப்பை ஏற்றபிறகு, உங்களை எல்லாம் சந்தித்து உங்களின் வாழ்த்துக்களைப் பெற வந்திருக்கிறேன்.

இங்கு நம் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பேசும்பொழுது சொன்னார், முத்தரசன் பேசும்பொழுதும் குறிப்பிட்டார். எல்லோரும் எனக்கு பிறந்தநாள் வாழ்த்துகளைக் கூறினார்கள். அந்த வாழ்த்துகளை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், மீண்டும் மீண்டும் பிறந்தநாள் வாழ்த்து சொல்லும் போது வயது கூடும்போது ஒரு சின்ன கஷ்டம் இருந்து கொண்டுதான் இருக்கும். வயது ஏறிக் கொண்டே இருக்கிறதே என்று. அந்த வாழ்த்துகளை ஏற்றுக் கொள்கிறேன். ஆனால், அதைவிட மிக மிக முக்கியமான வாழ்த்து என்னவென்றால், துணை முதலமைச்சர் என்ற பொறுப்பை ஏற்றபிறகு முதன்முறையாக உங்களை எல்லாம் சந்தித்து, வாழ்த்துகளைப் பெறவே வந்திருக்கிறேன். உங்களோடு சேர்ந்து மணமக்களையும் வாழ்த்துவதற்காக வந்து இருக்கிறேன்.

### விவசாயிகள் நிறைந்த மாவட்டம்

நாகை மாவட்டம் விவசாயிகள் நிறைந்த மாவட்டம். அதேபோல் மீனவர்கள் அதிகம் நிறைந்த மாவட்டம், நாகை மாவட்டம். தமிழ்நாட்டு மீனவர்களை பொறுத்தவரை `நீங்கள் மக்களின் காவலர்கள்’ என்று சொல்லலாம். ஏன் இதை சொல்கிறேன் என்றால், புயல், மழை, வெள்ளம் எது வந்தாலும், முதலில் களத்திற்கு வருவதும் மக்களை மீட்பதும் மீனவ மக்களாகிய நீங்கள்தான். அப்படிப்பட்ட உங்களைச் சந்திக்கும் போது எனக்கு அந்தக் கூடுதல் உற்சாகம் பிறக்கிறது.

இந்தத் திருமணம் முழுக்கமுழுக்க ஒரு சுயமரியாதைத் திருமணமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இங்கு நமக்கெல்லாம் புரிகின்றபடி நம் தமிழ் மொழியில் மணமக்களை வாழ்த்தியிருக்கிறார்கள். மந்திரம் எல்லாம் சொல்லாமல், தமிழ்ப் பண்பாட்டின் அடையாளமாக இந்தத் திருமணம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட சுயமரியாதைத் திருமணங்களுக்கு ஒரு காலத்தில் சட்ட அங்கீகாரம் கிடையாது.

### சுயமரியாதைத் திருமணங்கள்

இப்படி நடத்துகின்ற திருமணங்கள் அனைத்தும் செல்லும் என்று, முதன் முதலில் 1967ஆம் ஆண்டில் நம் பேரறிஞர் அண்ணா அவர்கள்தான் முதன்முதலில் சட்டம் கொண்டுவந்தார். அதன் பிறகு, தமிழ்நாடு எங்கும் இதுபோன்ற சுயமரியாதைத் திருமணங்கள் நடைபெற ஆரம்பித்தது. இந்தத் திருமண அரங்கை பார்க்கும்பொழுது, எனக்கு மிகவும் மகிழ்ச்சியாகவும், பெருமையாகவும் இருக்கிறது.

ஏனென்றால், ஆண்களுக்கு நிகராக, இன்னும் சொல்லப்போனால் ஆண்களைவிட அதிகமாக பெண்கள், மகளிர், தாய்மார்கள் வந்து இருக்கிறீர்கள். ஆண்கள் எல்லாம் ஓரத்தில் நின்று கொண்டிருக்கிறார்கள். பெண்கள் எல்லாம் நாற்காலியில் உட்கார்ந்து இருக்கிறீர்கள். ஒரு காலத்தில் ஒரு நூறு ஆண்டுகளுக்கு முன்பு இந்த நிலைமை கிடையாது.

### நீதிக்கட்சித் தலைவர்கள்

பெண்கள் வீட்டை விட்டு வெளியே வருவதற்கே உரிமை கிடையாது. படிப்பதற்கு உரிமை கிடையாது. ஆனால், அதையெல்லாம் மாற்றியவர் அதற்காக எல்லாம் போராடியவர்தான் தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும், நம் திராவிட முன்னேற்றக் கழகமும், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களும்தான். நீதிக்கட்சித் தலைவர்களும், தந்தை பெரியாரும் பெண் விடுதலைக்காக பேசிய விஷயங்கள், கண்ட கனவுகள் அத்தனையையும் சட்டமாக்கியவர், நம் பேரறிஞர் அண்ணா அவர்களும், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களும்தான்.

இன்றைக்கு அவர்களின் வழியில், நம் திராவிட மாடல் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் அனைத்துத் திட்டங்களிலும், பெண்களுக்கு முன்னுரிமை கொடுத்து திட்டங்களை நிறைவேற்றி வருகிறார். கலைஞர்தான் காவல்துறையில் முதன்முதலில் பெண்கள் பணியாற்றலாம் என்று சட்டம் கொண்டு வந்தார். இந்தியாவிலேயே முதன் முறையாக கலைஞர் அவர்கள்தான் கொண்டு வந்தார்.

### பெண்களுக்கு சொத்தில் சமபங்கு

பெண்களுக்கு சொத்தில் சமபங்கு என்று கொண்டு வந்தவர், நம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். பெண்கள் உயர் கல்வி படிக்க பல சலுகைகள் கொடுத்தவர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். இன்றைக்கு நம் முதலமைச்சர் அவர்கள் அவரின் ஆட்சியில், 50 சதவிகிதம் அளவுக்கு உள்ளாட்சித் தேர்தலில் பெண்கள் போட்டியிடும் இட ஒதுக்கீட்டை கொடுத்தவரும் நம் தலைவர் அவர்கள். அதனால்தான் பல மாநகராட்சிகளில் மேயர்களாக, துணை மேயர்களாக இன்றைக்கு மகளிர் பணியாற்றிக் கொண்டு இருக்கிறார்கள்.

நகராட்சி, பேரூராட்சி, ஒன்றியங்களில், பஞ்சாயத்துகளில் பெண் தலைவர்கள் வந்து இருக்கிறார்கள். இங்கு அக்கா அழியாநிதியைப் போல ஏராளமான பெண் ஊராட்சி மன்றத் தலைவர்கள் பணியாற்றிக் கொண்டு வருகிறார்கள். இந்த நிலையை ஏற்படுத்தியதற்கு பெயர்தான் திராவிட மாடல் அரசு. அதேபோல் மகளிர் முன்னேற்றத்திற்கான ஏராளமான திட்டங்களை நம் முதலமைச்சர் அவர்கள் தந்துகொண்டு இருக்கிறார்கள்.

இன்றைக்கு மகளிர் வெளியே சென்று வேலை செய்யவேண்டும் என்பதற்காக, நம் தலைவர் கொண்டு வந்த திட்டம், போட்ட முதல் கையெழுத்து `பெண்களுக்கு விடியல் பயணத் திட்டம்’. ஒவ்வொரு மகளிரும் அந்தத் திட்டத்தின் வாயிலாக மாதந்தோறும் கிட்டதட்ட 1,000 ரூபாய் சேமிக்கிறார்கள்.

### புதுமைப்பெண் திட்டம்

பெண்கள் படிக்க வேண்டும். பள்ளிக்கூடம் படித்தால் மட்டும் பத்தாது, உயர்கல்வி படிக்க வேண்டும் என்று அரசுப் பள்ளியில் படித்து, எந்தக் கல்லூரியில் சென்று படித்தாலும், அது தனியார் கல்லூரியாக இருந்தாலும்சரி, அவர்களுக்கு கல்வி ஊக்கத் தொகையாக புதுமைப்பெண் திட்டம் என்ற பெயரில், மாதம் ஆயிரம் ரூபாய் கொடுக்கிறார். நம் தலைவர் அவர்கள்.

மாணவர்களுக்கும் தமிழ்ப்புதல்வன் என்ற திட்டத்தில் உயர்கல்வி படிக்க வேண்டும் என்று மாதம் ஆயிரம் ரூபாய் அவர்களுக்கும் கொடுக்கிறார். இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக இந்தியாவே திரும்பிப் பார்க்கின்ற வகையில் கலைஞர் மகளிர் உரிமைத்தொகைத் திட்டத்தை நம் முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார். ஒரு கோடியே 55 லட்சம் மகளிர் விண்ணப்பித்தார்கள். இன்றைக்கு ஒரு வருடத்திற்கும் மேலாக, சென்ற ஆண்டு செப்டம்பர் மாதம் தொடங்கப்பட்டது. இந்த கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தின் கீழ் மாதம்தோறும் ஆயிரம் ரூபாய் கலைஞர் மகளிர் உரிமைத்தொகைத் திட்டம் ஒரு கோடியே 16 லட்சம் மகளிருக்கு ஒவ்வொரு மாதமும் சென்று கொண்டிருக்கிறது. இன்றைக்கு இந்தத் திட்டத்தை பல மாநிலங்கள் பின்பற்ற தொடங்கி இருக்கின்றன. இதற்குப் பெயர்தான் `திராவிட மாடல் அரசு’. இந்தத் திட்டங்கள் வாயிலாக, மகளிர் பொருளாதார சுதந்திரத்தை, நம் திராவிட மாடல் அரசு நிலைநாட்டி இருக்கிறது.

### வெற்றிக் கூட்டணி

இதையெல்லாம் பார்க்கும் போது சில பேருக்கு எதிர்கட்சியினருக்கு பொறாமை ஏற்படத்தான் செய்யும். அதுவும் குறிப்பாக, நம் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கக்கூடிய எடப்பாடி பழனிச்சாமி அவர்களுக்கு அதிகமான வயிற்றெரிச்சல். காலமெல்லாம் தமிழ்நாட்டிற்கு உழைத்த கலைஞரின் பெயரை ஏன் எல்லா திட்டத்திற்கும் கலைஞர் பெயரை வைக்கிறார்கள் என்று அவருக்கு வயிற்று எரிச்சல். அதனால்தான் எப்படியாவது நம் கூட்டணி உடையாதா? ஏதாவது ஒரு விரிசல் விழுந்து விடாதா? என்று காத்துக் கொண்டிருக்கிறார். ஆனால், கண்டிப்பாக நம் தலைவர் அவர்கள் கடந்த ஏழு தேர்தலில் ஒரு வெற்றிக் கூட்டணியை அமைத்தாரோ, அதேபோல் இந்த முறையும் தமிழ்நாட்டு மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு வெற்றிக்கூட்டணியை மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியை நம் தலைவர் அவர்கள் அமைப்பார்.

நாம் வெற்றிக்கூட்டணியைத் தொடர்ந்து வெற்றிப்பாதையில் கொண்டு போய்க் கொண்டிருக்கிறோம். ஆனால், எதிர்கட்சி நிலைமையை யோசித்துப் பாருங்கள். ஒரு மூன்று நாட்களுக்கு முன்பு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொருளாளர் அண்ணன் திண்டுக்கல் சீனிவாசன் அவர்கள் பொதுக்கூட்டத்திலேயே பேசுகிறார். என்ன சொல்கிறார். கூட்டணியைக் கூப்பிடுகிறோம். ஆனால், ஒருவன் 200 கோடி கேட்கிறான், 20 சீட்டு கேட்கிறான். இப்படி என்று பேரம் பேசிக்கொண்டு இருக்கும் கூட்டணிதான் நமக்கு எதிரே இருக்கக்கூடிய கூட்டணி. ஆனால், நம் கூட்டணி தி.மு.க. தலைமையிலான கூட்டணி வெற்றிக்கூட்டணி, கொள்கைக் கூட்டணி அது எப்போதுமே மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய கூட்டணி.

என்றைக்கு தலைவர் அவர்கள் கழகத்தின் தலைவராகப் பொறுப்பேற்றாரோ அன்றிலிருந்து இன்றைக்கு வரைக்கும் அனைத்துத் தேர்தல்களிலும் நம் கூட்டணி வெற்றியைப் பெற்று இருக்கிறது. எனவே, வர இருக்கின்ற 2026ஆம் ஆண்டு தேர்தல் மிக மிக முக்கியமான தேர்தல். எப்படி நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாட்டு மக்கள் 100 சதவிகித வெற்றியை, நம் கூட்டணிக்குக் கொடுத்தார்கள். நம் தலைவருக்குக் கொடுத்தார்கள். நம் திராவிட மாடல் அரசுக்குக் கொடுத்தார்கள். 40 க்கு 40 தொகுதிகளிலும் வென்று காட்டினோம். சட்டமன்றத் தேர்தலிலும் 234 தொகுதிகளில் குறைந்தது 200 தொகுதிகள் வெற்றி பெற வேண்டும் என்று தலைவர் அவர்கள் உறுதி கொடுத்திருக்கிறார். அதை நோக்கியே நம் பயணம் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

### ஒரே ஒரு வேண்டுகோள்

மணமக்கள் இருவரும் நன்கு படித்தவர்கள். அதிகம் அறிவுரை சொல்லத் தேவையில்லை. ஒரே ஒரு வேண்டுகோள்தான். தலைவர் அவர்கள் எப்பொழுதுமே சொல்வதைப் போல் உங்களுக்கு பிறக்கின்ற குழந்தை அது ஆண் பிள்ளையாக இருந்தாலும் சரி, பெண் பிள்ளையாக இருந்தாலும் சரி, அழகான தமிழ்ப் பெயரை சூட்ட வேண்டும் என்று கூறிக்கொண்டு, மணமக்கள் இருவரும் நண்பர்களாக, ஒருவரையொருவர் புரிந்துகொண்டு அதேபோல் சுயமரியாதையோடு வாழ வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்தத் திருமண விழாவில் பங்கேற்று மணமக்களை வாழ்த்துவதற்கு வாய்ப்பு கொடுத்த அண்ணன் மனோகரன் அவர்களுக்கும் அண்ணன் கௌதமன் அவர்களுக்கும் மணமக்கள் வீட்டாருக்கும் அனைத்துக் கட்சி தலைவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், அன்பில் மகேஷ்பொய்யாமொழி, சிவ.வீ.மெய்யநாதன், கோவி.செழியன், ஆவடி நாசர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் முத்தரசன், நாகப்பட்டினம் மாவட்ட கழகச் செயலாளர், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் கௌதமன், மாவட்ட கழகச் செயலாளர் க. பூண்டி கலைவாணன், நிவேதா முருகன், அண்ணாதுரை, நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர்கள் நாகை மாலி, ஆளூர் ஷாநவாஸ், அசோக்குமார், பன்னீர்செல்வம், மாரிமுத்து, கழகத்தின் விவசாய அணிச் செயலாளர், ஏ.கே.எஸ். விஜயன், மாநில விவசாய தொழிலாளர் அணி தலைவர், தாட்கோ தலைவர் மதிவாணன்,

மாநில மீனவர் அணி துணை தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான கே.பி.சங்கர், கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் குத்தாலம் கல்யாணம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.கே.வேதரத்தினம், காமராஜ், நாகை அசோகன், குத்தாலம் அன்பழகன், கழக மீனவர் அணியின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின், இளைஞர் அணி மாநிலத் துணைச்செயலாளர் இளையராஜா, மாநில மீனவர் அணி துணைச் செயலாளர்கள் தம்பிதுரை, வி.பி.பொன்னரசு, எரிக்ஜூடு, ஜெயபிரகாஷ், ரவிச்சந்திரன் ராமவல்லி,

சிறுபான்மையினர் நல உரிமை துணைத் தலைவர் ஷாகுல் ஹமீது, செல்வம், ரவிச்சந்திரன், ஆரூர் மணிவண்ணன், கற்பகம் நீலமேகம், லோகநாதன், மேகநாதன், கோவிந்தராஜன், மறைமலை, ஒன்றியக் கழகச் செயலாளர்கள் வடுவூர் ராஜேந்திரன், தாமஸ் ஆல்வா எடிசன், நகர கழகச் செயலாளர் மாரிமுத்து, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் கார்த்திக், குமார், துணை அமைப்பாளர்கள் அசோக், தாமோதரன், கலையரசன், டேனியல் சத்யா, சுரேஷ்குமார், பன்னீர்செல்வம், நகர அமைப்பாளர் சத்யன், சோழன்சங்கர், காளியம்மாள் மற்றும் கழக முன்னணியினர் பலரும் கலந்து கொண்டனர்.






துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நாகப்பட்டினம் மாவட்டம், நாகூர் தர்காவில் நடைபெற உள்ள சந்தனக்கூடு விழா முன்னேற்பாடு பணிகள் குறித்து நேற்று (24.11.2024) ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர் கே.நவாஸ் கனி, தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழக தலைவர் என்.கௌதமன், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத் தலைவர் உ.மதிவாணன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜெ.முகம்மது ஷா நவாஸ், சிறப்பு திட்ட செயலாக்கத் துறை செயலாளர் மருத்துவர் தாரேஸ் அகமது, மாவட்ட ஆட்சித்தலைவர் ப.ஆகாஷ், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஏ.கே. அருண் கபிலன்,சிறப்பு திட்ட செயலாக்கத் துறை துணைச் செயலாளர் மு.பிரதாப், மற்றும் அனைத்து துறை அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.